**சீத்தாவாக்கபுற நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீத்தாவாக்கபுற நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீத்தாவாக்கபுற நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மூலதன செலவின மானியம் ரூபா 3,098,533- ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. நகர சபை அலுலக கட்டிடத்தில் இடவசதிகளை மேம்படுத்துவதற்காக கிடைத்த மூலதன மானியத்திற்குரிய செலவிடப்பட்ட உள்ளவாறான செலவினம் ரூபா 7,392,186 இற்குப் பதிலாக ரூபா 7,500,000 எனக் கணக்கீடு செய்யப்பட்டு மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 2,990,718 ஆன மூலதன மானியம் 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த மூலதன மானியமாக கணக்கீடு செய்த காரணத்தினால் இவ் வேறுபாடு உருவாகியிருந்தது. | ஆண்டில் கிடைத்த மூலதன செலவின மானியங்கள் அவ்வாண்டின் மூலதன செலவின மானியமாக வருமானத்திற்கு எடுக்கப்படாததுடன் பெறுகின்ற அனைத்து மூலதனச் செலவின மானியங்களும் மீண்டெழும் வருமானமாக தற்போதைய கணக்கு நியமத்தின் பிரகாரம் இனங்காணப்படவில்லை. ஆதலால் இவ்வாண்டில் கிடைத்த மொத்த மூலதன செலவின மானியத்தின் பெறுமதியான ரூபா 14,002,089 தொகை வருமானமாக கருத முடியாது. | மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது மீண்டெழாத செலவினங்களுக்காக அரசிடமிருந்து மாற்றப்பட்ட மாற்றல்களின் பெறுமதி ரூபா | உங்களால் குறிப்பிடப்பட்ட மீண்டெழாத செலவினத்திற்காக பெறுமதி ரூபா 3,505,652 பரீட்சை மீதியின் பிரகாரம் | ஆண்டிற்குரிய காலக்கழிவு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 35,066,521 இற்குரிய 2021 ஆம் ஆண்டின் போது காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,506,652 ஆக இருந்த போதும் ரூபா 1,905,642 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 1,601,010 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கண்டுபிடிக்க முடியவில்லை. எவ்வாறாயினும், தற்போது கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் எங்களால் காண்பிக்கப்பட்டுள்ள தொகை சரியானதாகும் என அறிவிக்கின்றேன். | |
| (இ) | கட்டிடங்களின் பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 109,647 கூடுதலாகவும் மேலும் 06 நிலையான சொத்து விடயங்களின் பெறுமானத்தேய்வு பெறுமதிகளின் கூட்டுத் தொகை ரூபா 776,117 குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் குறைந்து செல்லும் மீதி முறையில் கணக்கிடப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். | பெறுமானத்தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 651,985 ஆக இருந்த போதும் ரூபா 724,428 ஆக காண்பிக்கப்பட்டதால் ரூபா 72,443 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. நகர சபை பின்பற்றிய பெறுமானத்தேய்வு கொள்கை குறைந்து செல்லும் முறைமையாக இருப்பதால் நூலகப் புத்தகங்களின் பெறுமானத்தேய்வு செய்யும் போது அக்கொள்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2022 ஆம் ஆண்டில் 2 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவின் மூலம் சீராக்குவதாக அறியத் தருகின்றேன். | பெறுமானத்தேய்வு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில், ரூபா 7,881,460 பெறுமதியான 07 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதுடன் அந்த வாகனங்களின் தேய்மானப் பெறுமதி ரூபா 445,106 ஆகும். அந்த வாகனங்களின் விற்பனை மூலம் சபைக்கு ரூபா 1,967,468 கிடைத்துள்ளதுடன், இந்த கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இலாப நஷ்டம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலாபம் மற்றும் நட்டம் கணக்கிடப்பட்டு காட்டப்படாவிட்டாலும், அதன் மூலம் பெறப்பட்ட தேறிய விளைவு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கணக்குகளில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தப் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இலாப நட்டங்களைத் தனித்தனியாகக் கணக்கிட்டு, அவற்றை திருத்தம் செய்தல் அவசியமில்லை. | வாகன விற்பனையால் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 222,794 மற்றும் பெறவேண்டியவ ட்டி வருமானம் ரூபா 129,546 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலுவை வட்டி கணக்கீடு செய்யப்படாமையால் இவ்வேறுபாடு உருவாகியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான காசு மீதி காண்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை வங்கியின் வங்கிக் கணக்கில் திருத்தப்பட்ட காசு மீதி ரூபா 14,222,200 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் திருத்தங் களுக்கு முன் காசு மீதியை பதிவுசெய்தமையால் ரூபா 13,764,780 என பதிவு செய்ததன் மூலம் காசு மீதி ரூபா 457,420 ஆகக் குறைத்துக் காண்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, திசெம்பர் மாதம் உறுப்பினர் படிகள் மீள்நிரப்பலாக ரூபா 360,000 உம் நிலையான வைப்பு வட்டி ரூபா 92,466 மற்றும் நேரடி பெறுவனவுகளுக்கான ரூபா 4,954 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | உறுப்பினரின் கொடுப்பனவு ஆண்டு தொடர்பான வருமானம் வருமானக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 2021 திசெம்பரில் நிலுவையில் உள்ள உறுப்பினர் படிகளை சரியாகப் பதிவு செய்யாததால், இந்த உறுப்பினர் படிகளை வருமானத்தில் அல்லாமல் திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | நகர அபிவிருத்தி றநிதியக் கணக்கில் 2021 திசெம்பலர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 153,137 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவையில் உள்ள வட்டியைக் கணக்கிடாததால் இந்த வேறுபாடு ஏற்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | களஞ்சிய இருப்பு பெறுமதி ரூபா 770,973 ஆன ஆயுர்வேத மருந்து இருப்பு இரண்டு முறை உள்ளடக்கப்பட்டதால் மொத்த இருப்பு மீதி ரூபா 770,973 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | அவதானிப்புடன் இணங்குவதாகவுமத் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 695,810 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மூலதனச் செலவினமாக பதிவுசெய்யப்பட்டமை காரணமாக ஆண்டின் மிகை | நிலையான சொத்துப் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு இரட்டிப்பு கணிப்பு வராதை வகையில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டின் போதானக கொள்வனவுகள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமதியால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த வாகனங்கள் மற்றும் நூலகப் புத்தகங்களின் நன்கொடை ரூபா 3,569,735 ஆகவும் கடன் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் நிர்மாணிக்கப்படும் வீதிகள் பாலங்கள், மதகுகள் ரூபா 2,437,163- மொத்தம் ரூபா 6,006,898 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலின் கீழ் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 6,006,898 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல் ரூபா 2,273,138 ஆல் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | உங்கள் அவதானிப்புடன் இணங்குகின்றேன். விரிவான வருமானக் கூற்றில் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் உரிமைக்கு இதனால் எவ்வித தாக்கமும் இடம்பெறாதிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்று மூலம் மேலதிக தகவல்கள் தருவது மட்டுமே ஆகும். அதனால் இரட்டைப் பதிவில் இக்கூற்று உள்ளடங்காது. | காசுப்பாய்ச்சல் கூற்ற சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 7,403,556 நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்படாமையால் நிதிச் செயற்பாடு களிலிருந்தான காசு அளவு அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் இனங்காணப்பட்ட மூலதன செலவினமாக ரூபா 1,905,642 கழிக்கப்பட்டு | - மேற்படி - | காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியான பெறுமதிகளுடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் இனங்காணப்பட்ட மூலதன செலவின படிகளாக ரூபா 3,302,462 தொகை கூட்டப்பட்டிருந்தது.

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 3 கணக்கு மீதிகளின் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 54,606,738 ஆக இருந்த போதும் அதற்குரிய அட்டவணைகள் / பட்டோலைகள் என்பவற்றின் பிரகாரம் ஒரு கணக்கின் மீதி ரூபா 750,415 கூடுதலாகவும் மற்றைய இரண்டு கணக்குகளின் மீதி ரூபா 242,838 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை

| | விடயம் | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் மிகை அல்லது பற்றாக்குறை இனங் காணப்பட்டு மூலதனச் செலவின படிகளாக ரூபா 3,302,462 கழிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கணக்கிடப்பட்ட முறை தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | மூலதனச் செலவின படிகள் பெறுமதி, கணக்கிடப்பட்ட முறை, | இத்தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் மிகை அல்லது பற்றாக்குறை இனங் காணப்பட்ட மூலதனச் செலவின படிகளாக உறுதிப்படுத்துகின்றேன். | சரியான பெறுமதி கணக்கிடப்பட்ட முறை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 6,108,952 ஆன வருமானத்திற்காக வைப்பு மீதி உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களுக்காக விரிவான | வருமான வைப்புக்கள் சான்றிதழ் மற்றும் விரிவான அட்டவணைகள் | விசேட ஆய்வொன்றைச் செய்து 2022 ஆம் ஆண்டில் இறுதி திகதிக்கு முன்னர் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். இந்நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களுக்காக சரியாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள துடன் எழுத்து மூலச் | கணக்காய்விற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 8,036,784 மூலதன செலவினத்திற்கான கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு உரிய நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை | சான்றுகளை சமர்ப்பிக்கும் போது ஏதேனும் தாமதம் இடம்பெற்றுள்ளது. |

## 1.7 இணங்காமைகள்

---------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 1/2020 9.1(அ) பந்தி | செயல்நிமித்த கட்டுநிதி பெற்றுக் கொடுள்ளும் பதவிநிலை உத்தியோகத்தரால் அச்செயற்பாடு நிறைவேற்றியவுடன் செயல்நிமித்த கட்டுநிதி தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டு முதல் காணப்படும் ரூபா 584,289 பெறுமதியான முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மற்றும் திரண்ட மற்றும் ஒதுக்க கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கோட்பாட்டின் பிரகாரம் அதற்காக ஒதுக்கீடு செய்தல் ஒதுக்கம் மற்றும் ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்பட்டு பதிவழிப்பதற்கு மேற்கொள்ளப்பட வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் நகர அபிவிருத்திக்காக பேணிச் | நகர சபை மூலம் கழிவுப் பொருட்களை எரிப்பதற்கு எரிதாங்கியொன்றை | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி திட்ட சுற்றறிக்கை | செல்லப்படும் வங்கிக் கணக்கில் போதியளவு பணம் சேரும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் இனங் காணப்பட்ட செயற் திட்டங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். மேலும் 2022 ஏப்ரல் 8 ஆந் திகதி வரை அந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணிப்பதற்காக புசல்லாவ பெருந்தோட்டக் கம்பனிக்குரிய 5 ஏக்கருடன் கூடிய ‘‘பாத்ஹெம்வத்த’’ காணியை கொள்வனவு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக அப்பண்ததை ஈடுபடுத்துவதற்கு 2020/07/17 ஆந் திகதி பொதுச் சபையின் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது நிறைவேற்றப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,239,839 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 49,323,906 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 17,084,067 ஆல் அதிகரித்திருந்தமை இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தின் மொத்தம் ரூபா 88,772,344 ஆக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 53,741,774 ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 43,505,460 ஆக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக ஆண்டின் இறுதி மொத்த நிலுவை 130 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா நிலைமை காரணமாக நாடு அவ்வவ்போது மூடப்பட்டமை அனைத்து உத்தியொகத்தர்களும் சேவைக்கு தடவை அடிப்படையில் அறிக்கையிட்டிருந்தனர். இதன் போது ஆதனங்களுக்காக பிரவேசிக்கும் போது குறித்த ஆதனம் தனிமைப்படுத்தப் பட்டிருந்தமை வருமான பிரிவில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டமை போன்ற பல சிக்கல்கள் காரணமாக எமக்கு இதுவரை முறையாக பேணிச் செல்வதாகவும் நிலுவை வருமானம் மற்றும் வருமானத்தை சேகரிப்பது மந்தமான நிலைமையொன்றாக இருந்த போதும் மீண்டும் இந்நிலைமையிலிருந்து முன்னைய நிலைமைக்கு | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொண்டு வரப்படவுள்ளது. | |

(ஆ) கடை வாடகை

-------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவைக் கடை வருமானம் ரூபா 3,036,064 ஆக இருந்ததுடன் இந்நிலுவை வருமானத்தை அறவிடு வதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் காணப்படும் நிலுவை மீதி தற்போது உடன்படிக்கையின் பிரகாரம் கடை உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கடை உரிமையாளர்களிடமிருந்து நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) கேள்வி கடை வாடகை

-----------------------------------------

| | | |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு முதல் 05 கேள்விதாரர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த கேள்வி வாடகை மீதி ரூபா 62,570 ஆக இருந்தது. அக்காலப்பகுதியினுள் அந்தக் கேள்விதாரர் களிடமிருந்து உடன்படிக்கை செய்யப்படாமல் இக்கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமையால் இக்கேள்வி கடை வாடகை மீதியை அறவிடப்பட முடியாதிருந்தது. | இந்த கடைகளுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டமை கோவை காணப்படவில்லை. சில கேள்வி மூலம் கடைகளில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் மாதாந்த வாடகை கொடுப்பனவிற்கு பெறுகை செய்வதற்கு தவறியமையால் மிகுதித் தொகையை அறவிடுவதற்கும் உடன்படிக்கை நிபந்தனைகள் இல்லாமையால் உறுதிப்படுத்தப்பட்டது. ஆதலால் இத்தொகையை அறவிடுவதற்கு முடியாதுள்ளது. | பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

(ஈ) வாடிவீட்டு வாடகை

----------------------------------

| | | |
|---|---|---|
| அவிசாவளை வாடிவீடு 2020 மே முதல் 2021 திசெம்பர் 31 வரை தனியார் நிறுவன மொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியதற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடிவீட்டு வாடகை ரூபா 4,267,885 ஆக இருந்தது. | குறித்த நிறுவனத்திற்கு 2020 ஆம் ஆண்டில் covid தொற்று காரணமாக சலுகையாக 2020 மார்ச்/ ஏப்ரல் / மே மாதங்களுக்காக மாதாந்த வாடகையின் அரைப்பங்கு சலுகை வழங்கப்பட்டிருந்தது. இச்சலுகை வழங்கப்பட்டதன் மூலம் வாடிவீடுகள் மூலம் எங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டிய மாதாந்த வாடகையை நிலுவையின்றி அறவிடுவதாகும். | நிலுவை வாடிவீட்டு வாடகையை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) தனியார் பஸ் வண்டி நிறுத்தல் கட்டணம்<br>--------------------------------------------<br>1989 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய தனியார் பஸ்வண்டி நிறுத்தல் கட்டணங்களின் பெறுமதி ரூபா 230,700 ஆகும். | கருத்து தெரிவிக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) வினோத வரி<br>-------------------<br>ரூபா 516,862 பெறுமதியான வினோதவரி பெறுமதி 2021 ஏப்ரல் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிலிப் குணவர்த்தன விளையாட்டரங்களில் ஓடுபாதை நிர்மாணம்<br>-----------------------------------------------------<br>சபையால் நிர்மாணத் திட்டமிடல் முறையாக முகாமைப்படுத்தப்படாமையால் சபை நிர்மாணமொன்று இடைநிறுத்தப்பட்ட காரணத்தினால் ரூபா 305,979 ஆன விளைவற்ற செலவினமொன்றை செலவிட நேர்ந்துள்ளது. | மேற்படி செயற்திட்டத்திற்குரிய ஒப்பந்தக்காரரால் அந்த இடத்திற்கு வழங்கப்பட்டிருந்த 4200 கற்கள் நகர சபையின் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்படாததால் கற்கள் அளவு சபை அந்த அளவான சபை வளவில் பதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சபையின் பணம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை வங்கி கட்டிடம் அமைந்துள்ள காணியை குத்தகைக்கு வழங்குதல்.<br>--------------------------------------------<br>சீதாவாக்கபுற நகர சபையால் 1989 யூன் 09 ஆந் திகதிய 248/334 ஆம் இலக்க உடன்படிக்கையின் | (i) குறித்த மாதாந்த வாடகையை அறவிடுவதற்காக அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் L/29081/19 ஆம் இலக்கத்தின் கீழ் வழக்கொன்று | இலங்கை வங்கியுடன் நகர சபையால் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடுகின்றேன். 2021.10.18 ஆந் |

பிரகாரம் 1988 யூலை 01 ஆந் திகதி முதல் 2018 யூன் 30 ஆந் திகதி வரை 30 ஆண்டு காலத்திற்காக சபைக்குச் சொந்தமான காணியில் உள்ள கட்டிடமொன்று இலங்கை வங்கிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் குத்தகை காலத்தை நீடித்து தருமாறு வங்கியால் 2017 ஆம் ஆண்டின் போது சபையிடம் வேண்டுகேள் விடுக்கப்பட்டதன் பிரகாரம் விலை மதிப்புத் திணைக்களத்தின் புதிய மதிப்பீட்டிற்கு உட்பட்டு குத்தகைக் காலத்தை நீடிப்பதற்கு சபை இணங்கியிருந்தது. உரிய குத்தகை புதிய மதிப்பீட்டிற்கு முன்னர் இலங்கை வங்கியால் வருடாந்த குத்தகையாகவும் அதற்குரிய வற் தொகையாக ரூபா 475,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 475,000 மற்றும் அதற்குரிய வெட் வரி புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வங்கியால் சபைக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகையாகவும் அதற்குரிய வட்டியாகவும் ரூபா 5,700,000 ஆக இருந்தது. இந்த புதிய வாடகையை இலங்கை வங்கியால் கொடுப்பனவு செய்வதற்கு இணங்காமையால் நகர சபையால் அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. கட்டிடத்தின் புதிய வருடாந்த மதிப்பீட்டு வாடகையான ரூபா 5,700,000 பணத்தை சபைக்கு செலுத்தாமல் அக்கட்டிடத்தை பயன்படுத்தி வந்தது. இவ்வழக்கு 2022 ஏப்ரல் 18 ஆந் திகதி வரை இணக்கத்திற்கு வராதிருந்ததுடன் 2018 யூலை 01 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் தொடுக்கப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ii) உடன்படிக்கை பிரகாரம் மீண்டும் குறித்த தரப்பினருக்காக குத்தகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கையில் ஏற்பாடுகள் உள்ளதால் அதற்காக விலை மதிப்புத் திணைக்களத்தில் இருந்து மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் குறித்த மாதாந்த வாடகை கொடுப்பனவு செய்யாமை மற்றும் உடன்படிக்கை செய்யாததன் பேரில் இந்த அவிசாவளை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

(iii) மாநகர சபை இலங்கை வங்கியுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்..202.10.18. ஆந் திகதி உள்ளூராட்சி அமைச்சில் இலங்கை வங்கியுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் கலந்துரையாடி தீர்வு காண வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய போதிலும், பேச்சுவார்த்தை மூலம் உரிய நிலைமைக்கு தீர்வு காணப்படவில்லை.

திகதி உள்ளூராட்சி மன்ற அமைச்சின் போது இலங்கை வங்கியுடன் கலந்துரையாட மேற்கொள்ளப்பட்ட போதும் குறிப்பிட்ட இரண்டு தரப்பினரும் கலந்துரையாடி தீர்வு காணுமாறு தீர்மானிக்கப்பட்டது. அதற்குரிய தரப்பினருடன் கலந்துரையாடிய போதும் குறித்த நிலைமை கலந்துரையாடல் மூலம் தீர்வு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வில்லை.

| | | |
|---|---|---|
| திகதி வரை அறவிட வேண்டிய குத்தகை பெறுமதியான ரூபா 19,475,000 தொகை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஆ) வெவே கெலே சுற்றாடல் சுற்றுலா இடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>---------------------------------- | | |
| 27 ஏக்கர் அளவிலான காணி அளவில் அமைந்துள்ள வெவே கெலே சுற்றாடல் சுற்றுலா இடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 11,360,000 செலவிடப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,503,193 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அவ்விடத்தில் பழைய சனசமூக மண்டபம் அகற்றப்பட்டு இரண்டு மாடிக் கட்டிடமொன்றை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் அந்த இடத்தின் உண்மையான உரித்தினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்குச் சொந்தமானதாக கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வெவே கெலே இடத்தினை கையேற்பதற்காக அவ்வவ்போது ஒவ்வொரு நிறுவனங்களிற்கும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இறுதியாக பிரதான செயலாளர் (மேல் மாகாணம்) ஆம் இலக்க 2021.12.30 ஆந் திகதிய CSWP/ADM/16-19/F1/ 01-01(A) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கையளிப்பது தொடர்பாக பிரதேச செயலாளரின் நிலைப்பாட்டினை தெரிவிக்குமாறு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது. அக்கடிதத்திற்கு கவனத்தை செலுத்தி எனது சீநச/01/02/73 மற்றும் 2022.03.30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இது தொடர்பாக எடுகக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிக்குமாறு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | குறித்த காணியின் உரித்தினை கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சீத்தாவக்கபுற நகர சபைக்குச் சொந்தமாக 07 உத்தியோகபூர்வ விடுதிகள் காணப்படுவதுடன் அதில் 07 உத்தியோகத்தர்கள் | சீத்தாவக்கபுற நகர சபைக்குச் சொந்தமான 07 உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கும் | தாபன விதிக்கோவை மற்றும் குறித்த சட்டங்களின் |

| | | |
|---|---|---|
| /ஊழியர்கள் 07 பேர் குடியிருக்கின்றனர். தாபனவிதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6:1 ஆம் பிரிவின் பிரகாரம் 4,3 மற்றும் 2 தரங்களுக்குரிய வீடுகளின் பொதுவான குத்தகைக்காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதும் மேற்படி ஊழியர்கள் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக குடியிருந்து வருகின்றனர். மேலும், இந்த வீடுகளில் அத்துமீறிய நிர்மாணங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது. தாபன விதிக்கோவையின் XVIII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அரசின் வீடொன்றடை உடமை கொண்டு உத்தியோகத்தரொருவர் அக்காலப்பகுதியை மிகைத்து வீட்டில் குடியிருப்பதன் பேரில் தண்டப்பணமொன்ற அறவிடப்பட வேண்டுமெனவும் 1971 இன் 03 ஆம் இலக்க மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அரசின் வீடு தொடர்பாக மாவட்ட செயலாளர் அல்லது குறித்த தாபன தலைவருக்கு இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. | ஊழியர்கள் தாபனவிதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6:1 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக குடியிருப்பதால் அவர்களுக்கு 1978 இன் 42 ஆம் இலக்க உத்தியோகபூர்வ விடுதிகளின் உரித்தினை கையேற்கும் சட்டத்தின் பிரகாரம், வெளியேற்றும் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை விஞ்சிய உத்தியோக பூர்வ விடுதிகளில் அவர்கள் குடியிருப்பதால் 2021 யூன் மாதம் முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை திறந்த சந்தையில் வாடகையை பிரதான மதிப்பீட்டாளரால் அறிக்கையிட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளும் வரை தண்டப்பணத்தின் ஒரு பகுதியாக சம்பளத்தில் 8 % அறவிடப்பட்டது. | பிரகாரம் விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதங்கள், பொறிகள் மற்றும் உபாகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையின் சிறப்பு வியாபார தொகுதியின் மேல்மாடியில் கடைகளை நிர்மாணிப்பதற்காக சபையால் ரூபா 22,211,213 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேல்மாடியின் 106 அறைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட அறைகளின் எண்ணிக்கை 56 ஆகும். இந்த 56 கடைகளில் 28 கடைகள் | பஸ் நிறுத்துமிடத்தின் மேல் மாடியில் அமைக்கப்பட வேண்டிய 34 கடைகளுக்ககாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதுடன் இவ்வாண்டில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட உள்ளது | சபையின் ஆதனங்களை விளைவற்ற வகையில் வைக்காமல் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | மூடப்பட்டிருந்ததுடன் மேல் மாடியின் ஒரு பகுதியில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 34 அறைகளுக்கு இதுவரை கடைகள் நிர்மாணிக்கப்படாமை காரணமாக அதன் சிலப் சிதைவடைந்து இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | | பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை மெய்மையாய்வு செய்யும் போது ரூபா 7,389,200 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பொது நிர்வாக, மாகாண சபைகள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டில் நன்கொடையளிக்கப்பட்ட வைப்பிரேடின் ரோலர் இயந்திரம் கணக்காய்வு திகதியான 2021 திசெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருநதது. | 2022.01.11 ஆந் திகதி காணப்பட்ட மாதாந்த பொதுச் சபையின் 5.12 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் இந்த U தொன் 08 வீதி பதப்படுத்தி பாலிந்நுவர பிரதேச சபைக்கு வழங்கு வதற்கு இணங்கி எழுத்துமூலம் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கும் பாலிந்தநுவர பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுட ன் இதுவரை பதிலொன்று வழங்கப்படவில்லை. | சபையின் தேவைப்பாட்டி னையும் இயலளவின் பேரில் சொத்துக்கள் பெற்றுக்கொள் ள்ப்பட வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைதவிர்ப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட முச்சக்கர வண்டி கணக்காய்வு திகதியான 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திருத்த நிலைமையில் காணப்படும் 06 வாகனங்கள் காணப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | திருத்தங்களை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஓட்டத்திற்கு சாரதிகள் இல்லாத காரணத்தினால் இரண்டு வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | விரைவில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **சீதாவக்க கைத்தொழில் பேட்டையில் இடம்பெறும் சுற்றாடல் பாதிப்பு** | | |
| சித்தாவகபுர நகர மத்திக்கு அண்மித்தாக தனியார் நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் கைதொழிற் பேட்டையின் முறைசாரா மற்றும் கவனக் குறைவான செயற்பாடுகளால் அருகில் வசிக்கும் வெரலப்பிட்டிய கிராம மக்களுக்கு பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆற்றில் கலக்கும் அசுத்தமான நீர், அசுத்தமான நீரால் புவக்பிட்டிய மூழ்குதல், வாகன புகை மற்றும் சத்தத்தால் கிராம மக்கள் நோய்வாய்ப்படுதல், கழிவுகள் குடிநீரில் சேர்தல் போன்ற பல சுற்றாடல் பிரச்சினைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | என்னால் அண்மையில் பல சந்தர்ப்பங்களில் நீர் சுத்திகரிப்பு தாங்கியிலிலிருந்து கழிவு நீர் வழிந்தோடும் என குறிப்பிட்ட கால்வாய் பரீட்சிக்கப்பட்டுடன் நிறமற்றதாகவும் தெளிவாகவும் இருந்தது. சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு அந்த இடத்தில் நீர் மாதிரி எடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. | சுற்றாடல் சேதங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |